# காடும் காட்டு உயிரினமும்



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.WorldTamilAcademy.com

அறிவே வளம்

உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com



தேனைச் சேகரிக்கும் தேனீக்கள் - அதனைச்
சுவைத்து மகிழும் கரடிகள்!



காற்றில் அசையும் செடிகொடிகள் - அங்குக்
கூவிப்பறக்கும் குயில்கள்!



பச்சைப் பசுமையான புற்கள் - அங்கு
மேய்ந்து திரியும் மான்கள்!




www.worldtamilacademy.com



நீண்ட அடர்த்தியான மரங்கள் - அவற்றில்
பதுங்கிப் பாயும் புலிகள்!



நீரோடையில் நீந்திச்செல்லும் மீன்கள் -அங்குக்
காத்து நிற்கும் கொக்குகள்!



பழுத்துத் தொங்கும் பழங்கள்-பழத்தைக்

கொத்தித் தின்னும் கிளிகள்!



சிங்கம், புலி சிறுத்தையும் விட்டு விட்ட மிச்சத்தைத் தின்று சுத்தமாக்கும் கழுதைப்புலிகள்!



www.worldtamilacademy.com



காடு அழகே! காடு அழகே!
உயிரினங்கள் வாழும்
காடு அழகே!

**உலகத்தமிழ்க் கல்விக்கழகம்**

www.worldtamilacademy.com